# பணி நிறைவு வாழ்த்து!

திரு **க. இரகுசெல்வன்,**
**மதிப்பீட்டு அதிகாரி, சுங்க இல்லம், சென்னை.**

நாள்:-31-03-2023

சுங்கத்துக் கதவுகளும் சொல்லெடுத்து தானழைக்கும்,
எங்கள் **இரகுசெல்வன்** தான் என்றே எந்நாளும்!
வங்கக் கடலையும் வாரி யணைத்திடுமே யவர்,
தங்குத் தடையில்லா தனியன்பைத் தானறிந்து!

இங்கும் கடல் பரப்பும் ஏறுகின்ற வான் வழியும்,
சிங்கமகன் பேர் சொன்னால் சிலிர்த்து எழுந்திடுமே!
அங்கிங்கு எங்கென்றும் அனைவருக்கும் அறிந்தமகன்!
சுங்கப் படிகட்டில் சொல்லாடல் நிகழ்ந்தாலும்,

வங்கக் கடலையில் வார்த்தெடுத்த சொல்லமுதாய்,
எங்கள் அன்பின் மகன் எந்நாளும் வாழ்ந்திடுவான்!
சுங்க இல்ல ஆணையரோ செயல்வீரர் முகவர்களோ,
எங்களில் யாவருக்கும் இனிமையான நண்பனாவார்!

இங்கவரைத் தெரியாதோர் எவரும் இருந்ததில்லை!
தங்குதடையின்றி தமிழும் கன்னடமும் களிதெலுங்கும்
அங்கங்கே ஒலித்திட்டால் அங்கிருப்பார் **இரகுசெல்வன்!**
அங்கங்கே முழங்கும் அதிகாரம் அடுத்துக் கனிவாகும்!

இங்கின்று அவர் காண்பதுவோ இனிய **பணிநிறைவு!**
பொங்கும் மா கடல்போல் பொலிவுடன் அன்பு செய்வார்!
இங்கவரின் பணிநிறைவால், இன்றுசிலர் அன்பிழப்பர்!
இங்கிந்த பணிநிறைவு புதியதோர் நிலைகாட்ட,

எங்கள் ரகு ஏற்றமுடன் எந்நாளும் வாழ்தல் வேண்டும்!
தங்குதற்கும் தாக்குதற்கும் பிணியஞ்சி ஓடிவிட,
தங்கமகன் சிறகொலித்து வானில்வலம் வரவேண்டும்!
இங்கிந்த நன்நாளில் எந்நாளும் இன்புற்றிருக்க,



நண்பர் திரு **ஜெயசங்கருடன்** (மேனாள் உதவி ஆணையர்)
இணைந்து வாழ்த்தும்;
அன்பன்,

**கு.ப.அசோகன்,**
மேனாள் மதிப்பீட்டு அதிகாரி,
சுங்க இல்லம், சென்னை.
**30-03-2023**